# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் வணிக மாத இதழ்

Volume: 15 Issue : 02 MAY 2026 Tamil & English Monthly Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE





அவோ! மிளோ!! ஹொடோ!!!

## SITCON

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE 2026



## மாநாட்டு நிகழ்ச்சிகள்

ஆகஸ்ட் 15, சனிக்கிழமை

மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

ஆகஸ்ட் 16, ஞாயிறு

காலை 9.00 மணி முதல் இரவு 9.30 மணி வரை

தமிழ்நாடு சேம்பர் ஆப் காமர்ஸ்,

ஹட்சன் A/c ஹால், காமராஜர் சாலை, மதுரை.

## வர்த்தக கண்காட்சி

ஆகஸ்ட் 7, 8 & 9, 2026

வெள்ளி, சனி, ஞாயிறு

அருணாச்சலம் கமலாம்பாள் அரங்கம்

காமராஜர் சாலை, மதுரை.

காலை 9.30மணி முதல் இரவு 9.00 மணி வரை

## சிட்கான் 2026 மாநாட்டு மலர் வெளியீடு

## Madurai RUN 2026

ஆகஸ்ட் 9, ஞாயிறு, காலை 6 மணி,

காந்தி மியூசியம்,

மதுரை

METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்



# மெட்ரோ ஷூ மார்ட்



16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343

## JaiGenga Uniforms जेयगंगा यूनिफाम

133-A, East Masi Street, 4 Feet Lane, Madurai - 625 001.
Email : jaigenga@gmail.com | Website : www.jaigenga.com
89035 34438, 887059 4105 ESTD : 1968

Mfrs. Hospital Dress Material & Uniform, School & College Lab Coats, Aprons Industrial Uniform, Hotel Industry Uniform, Pharmaceuticals Drugs Mfrs. Dress Wears




## வாடகை / ஒத்திக்கு

133-கீழமாசி வீதி, மதுரை-1. போலீஸ் ஸ்டேஷன் அருகில்
தரை தளம் ( ஜெய்கெங்கா வாணிபம்)



1 வது மாடி, 2வது மாடி 1000 ச.அடி
மாத வாடகை Rs.25000/- ஒத்திக்கு Rs.2000000

ஜெய்கெங்கா நிறுவன ஸ்தாபகர் பிதாமகர்
K.N.K.ராமஜெயம் 8903534438 jaigenga@gmail.com

*Ananda Nilayam*

# Mayflower

*The Banquet Hall A/C*

Location - Google Map

Marriage Function | Betrothal | Naming Ceremony
Birthday Party | Puberty | Get-to-gether

*Hall available for all type of functions*

Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001

For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583

# தலைவர் அறிக்கை

## அஸ்கிதெஞ்கோ மொன்னு பொறெ

## நமஸ்கார்...

K.K. தினேஷ், தலைவர்

அரசியலில், நம் சமூகத்தவர்களுக்கான அங்கீகாரத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற நம் சமூக மக்களின் நோக்கம் இந்த தேர்தலின் மூலம் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த டிசம்பர் மாத இறுதியில், எஸ்-பேக் அமைப்பின் சார்பாக நடத்தப்பட்ட அரசியல் எழுச்சி மாநாட்டில் நம் சமூக அமைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்தன. அந்த மாநாட்டில், நம் சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் கட்சிக்கே எங்கள் வாக்கு என்று முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, நா.த.க., மற்றும் த.வெ.க. ஆகிய இரண்டு கட்சிகள் நம் சமூகத்தவருக்கு வாய்ப்புகள் வழங்கின.

இதில், த.வெ.க., சார்பாக போட்டியிட்ட நம் ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் ஆயுட்கால உறுப்பினர் திரு. எம்.எம். கோபிசன் அவர்கள் வெற்றி பெற்றதன் மூலம் தமிழகத்தில், நம் ஸௌராஷ்ட்ர சமுதாயத்தில், ஒரு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் ஒரு எம்.எல்.ஏ., கிடைத்துள்ளார். இதனை நம் சமூக மக்கள் கொண்டாடி மகிழ்ந்து வருகின்றனர்.

திரு. எம்.எம். கோபிசன் அவர்களின் வெற்றியில், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் பெருமிதம் கொள்கிறது. மேலும், அவருக்கு அமைச்சர் பொறுப்பு வழங்கிட வேண்டும் எனக் கோரி நம் சேம்பர் சார்பாக முதலமைச்சருக்கு கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. திரு. கோபிசன் அவர்களின் சேவை, தெற்கு தொகுதிக்கு மட்டுமல்லாமல், நம் சமூக மக்கள் அனைவருக்கும் சென்றடையும் என்று நம்புகிறோம். அவர், அடுத்தடுத்த உயரத்தைத் தொட வேண்டும் என நமது சேம்பர் வாழ்த்துகிறது.

நமது சிட்கான் 2026 மாநாட்டின் பிரவுச்சர் வெளியீட்டு விழா வெகுவிமரிசையாக நடைபெற்றது, மகிழ்ச்சியளிக்கிறது. 8வது முறையாக நடத்தப்படும் இந்த மாநாட்டின் நோக்கம், செயல்பாடுகள் மற்றும் பயன்கள் குறித்த பிரவுச்சர்-ஐ நமது சேம்பர் வெளியிட்டுள்ளது. இந்த லாப் ஸமாச்சார் இதழ் வாயிலாக பிரவுச்சர்-ஐ நம் உறுப்பினர்கள் பெறலாம். இந்த மாநாட்டிற்கு அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பை அவசியம்.

நமது பாரதப்பிரதமர் அவர்கள், அடுத்த ஒரு வருடத்திற்கு முதலீடாக தங்கம் வாங்குவதையும், வெளிநாட்டு சுற்றுலா செல்வதை தவிர்க்க வேண்டும் என்றும், முடிந்த அளவு எரிபொருள் சிக்கனம் செய்து பொதுப் போக்குவரத்தை பயன்படுத்த வேண்டியும் கேட்டுக்கொண்டுள்ளார். அமெரிக்க-ஈரான் போர் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை நம் மக்கள் புரிந்துகொண்டு நாட்டின் நலன் கருதி பின்பற்ற வேண்டி நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் உறுப்பினர்களை, நமது நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது. நன்றி.


SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
| --- | --- | --- |
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
| --- | --- | --- |
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
| --- | --- |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
| --- | --- | --- |
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

24.04.2026 – நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் 10வது செயற்குழு கூட்டம் மாட்டுத்தாவணியில் உள்ள பிரார்த்தனா ஆயுர்வேதா வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு முன்னதாக, ஆயுர்வேத மருத்துவர் T.M. பிரச்சன்ன குமார் அவர்கள், ஆயுர்வேத சிகிச்சையையும், அதுபற்றிய விழிப்புணர்வு தகவலையும் வழங்கினார். கூட்டத்தை நடத்த இடம் அளித்த அவருக்கும் நன்றி தெரிவித்து கௌரவிக்கப்பட்டார். இந்த செயற்குழு கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு.... தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார்.

05.05.2026 – சிட்கான் 2026 மாநாட்டின் பிரவுச்சர் வெளியீட்டு விழா நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக முனைவர் M. பிரபு.Founder & Executive Director, Balavigna Weaving Mills P.Ltd., Dindigul அவர்களும், கௌரவ விருந்தினராக மருத்துவர். O.R. குமரன் Sr. Consultant, Physician, Apollo Hospital, Madurai. அவர்களும் கலந்து கொண்டனர். திரு.S.A. சுரேஷ் குமார் MD., Don Publications P.Ltd., IIPE Laxmi Raman Global CBSE School, Palayamkottai அவர்கள் சிறப்புரையாற்றினார். சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமைத் தாங்கினார்.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

இந்த மாதம், நமது சிட்கான் 2026 மாநாட்டின் பிரவுச்சர் வெளியீடு செய்யப்பட்டது. இதனை நம் சேம்பர் அங்கத்தினர்கள் அனைவரும் பெறுவதற்காக, இந்த இதழிலேயே அச்சிட்டு வெளியீடு செய்துள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் ஆயுட்கால உறுப்பினர் திரு. எம்.எம். கோபிசன் அவர்கள் மதுரை தெற்கு தொகுதி வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளது ஸௌராஷ்ட்ர சமூக மக்கள் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அவரது மக்கள் பணி சிறக்க நமது இதழ்குழு சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த ஏப்ரல் மாத லாப் ஸமாச்சார் இதழ் மதுரை தனக்கன்களத்தில் உள்ள அனுஜ் டைல்ஸ் உரிமையாளர் திரு. செந்தில் அவர்களின் கரங்களால் வெளயீடு செய்யப்பட்டது. இதில் சேம்பர் நிர்வாகிகள் மற்றும் இதழ் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## வெற்றி

**வேட்பாளருக்கு வாழ்த்துகள்**



த.வெ.க. கட்சியின் வேட்பாளராக
மதுரை தெற்கு தொகுதியில்
போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள
நமது சமூக மண்ணின் மைந்தன்
திரு. **எம்.எம். கோபிசன்** அவர்களை
ஸௌராஷ்ட்ர சமூக மக்கள்
அனைவரின் சார்பாக
ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்
வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறது.

**ஆண்டு சந்தா உறுப்பினர்கள் 2026-27ம் ஆண்டிற்கான சந்தா தொகையை விரைவில் செலுத்தக் கேட்டுக்கொள்கிறோம்**

SCAN & PAY

## திருக்குறள்

**உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முரிந்தார் பலர்**

**பொருள்:** தம்முடைய சக்தியை அளந்து அறிந்துகொள்ளாமல் வெறும் ஆவேசத்தில் ஒரு காரியத்தை ஆரம்பித்து அதை முடிக்க முடியாமல் இடையில் விட்டுவிட்டுக் கெட்டுப் போனவர்கள் உலகத்தில் பலர் உண்டு.

அதிகாரம் 48 | வலியறிதல் (தனக்குள்ள சக்தியின் அளவை அறிவது) | அரசியல்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544



*Best Compliments*

# BVK GROUP



**Bala V Kutti**
Founder & Chairman

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

4th Floor (NW), Kothan Building, 114, M G Road, Nungambakkam, Chennai - 6000 834.
No 603, Keshava -BKC, Mumbai - 400 051.

Chennai | Madurai | Aralvoimozhi | Nettur | Gadag | Mumbai

அவோ! மிளோ!! ஹொடோ!!!

**SITCON**

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

2026

# BROCHURE LAUNCH




சிட்கான் 2026 சேர்மன் திரு. **K.K. குபேந்திரன்** அவர்களின் உரை



Dr. M. **பிரபு**



Dr. O.R. **குமரன்**



திரு.S.A. **சுரேஷ் குமார்**

மாபெரும் ஸௌராஷ்ட்ர தொழில் வர்த்தக மாநாடு – சிட்கான் 2026 வருகின்ற ஆகஸ்ட் மாதம் நடைபெற இருக்கிறது. மாநாடு குறித்து தகவல்கள் அடங்கிய சிற்றேடு – பிரவுச்சர் வெளியீடு கடந்த 05.05.2026 அன்று மாலை 6 மணிக்கு சேம்பர் அரங்கில் நடைபெற்றது. இந்த விழாவிற்கு சேம்பர் சிறப்பு விருந்தினராக முனைவர் M. பிரபு.Founder & Executive Director, Balavigna Weaving Mills P.Ltd., Dindigul அவர்களும், கௌரவ விருந்தினராக மருத்துவர். O.R. குமரன் Sr. Consultant, Physician, Apollo Hospital, Madurai. அவர்களும் கலந்து கொண்டனர். திரு.S.A. சுரேஷ் குமார் MD., Don Publications P.Ltd., IIPE Laxmi Raman Global CBSE School, Palayamkottai அவர்கள் சிறப்புரையாற்றினார். சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமைத் தாங்கினார். முன்னாள் தலைவர்கள் முன்னிலை வகித்தனர். சிட்கான் 2026 மாநாடு தலைவர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் சிட்கான் 2026 செயல்பாடுகள் பற்றி பேசினார்.




ஸௌராஷ்ட்ர தொழில் வர்த்தக மாநாடு – சிட்கான் 2026 பிரவுச்சர்-ஐ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முனைவர் M. பிரபு அவர்கள் வெளியீடு செய்ய, கௌரவ விருந்தினர் மருத்துவர். O.R. குமரன் அவர்கள் பெற்றுக்கொண்டார். சிறப்புப் பேச்சாளர் திரு. திரு.S.A. சுரேஷ் குமார், சேம்பர் நிர்வாகிகள் மற்றும் முன்னாள் தலைவர்கள் உடனிருந்தனர்.




ஸௌராஷ்ட்ர தொழில் வர்த்தக மாநாடு – சிட்கான் 2026 மாபெரும் வெற்றி பெற, முன்னாள் தலைவர்கள் திரு. C.K. சேகர், திரு. E.R. குமரேசன், திரு. K.K.G. பிரபாகரன். திரு. S.K.R. ரமேஷ், திரு. M.K. கலாதர் பாபு, திரு. குமரன் B. ஜகுவா மற்றும் உடனடி முன்னாள் தலைவர் திரு. T.R. மோகன்ராம் ஆகியோர் வாழ்த்தினர்.

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

Organised by

SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI

திட்டமிடுவோம் !
செயல்படுவோம் !!
சிகரம் தொடுவோம் !!!

அவோ ! மிளோ !! ஹொடோ !!!

# SITCON

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

August 7, 8 & 9 & 15, 16, 2026

# மாநாடு வர்த்தக கண்காட்சி மலர் வெளியீடு



## மாநாட்டு நிகழ்ச்சிகள்

2026

ஆகஸ்ட் 15, சனிக்கிழமை
மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

ஆகஸ்ட் 16, ஞாயிறு
காலை 9.00 மணி முதல் இரவு 9.30 மணி வரை

**தமிழ்நாடு சேம்பர் ஆப் காமர்ஸ்,**
ஹட்சன் A/c ஹால், காமராஜர் சாலை, மதுரை.

## வர்த்தக கண்காட்சி

ஆகஸ்ட் 7, 8 & 9, 2026
வெள்ளி, சனி, ஞாயிறு

**அருணாச்சலம் கமலாம்பாள் அரங்கம்**
காமராஜர் சாலை, மதுரை.
காலை 9.30மணி முதல் இரவு 9.00 மணி வரை

## சிட்கான் 2026 மாநாட்டு மலர் வெளியீடு

## Madurai RUN 2026

ஆகஸ்ட் 9, ஞாயிறு, காலை 6 மணி,
காந்தி மியூசியம்,
மதுரை

### வணிகம் | தொழில் | முதலீடு | வளர்ச்சி





0452 2629955, 93441 97952, sourashtra.chamber@gmail.com www.sourashtrachamber.org

Organised by

SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI

திட்டமிடுவோம் !
செயல்படுவோம் !!
சிகரம் தொடுவோம் !!!

அவோ ! மிளோ !! ஹொடோ !!!

# SITCON
SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE


August 7, 8 & 9 & 15, 16, 2026

**A/C STALLS**
**STALL FOR 3 DAYS**
**AUGUST 7, 8 & 9, 2026**
ARUNACHALAM KAMALAMBAL HALL, **MADURAI.**

**STALL TARIFF : PER Sqm.**

| | |
|---|---|
| REGULAR | Rs.3750/- |
| PRIME | Rs.5000/- |
| PREMIUM | Rs.6500/- |
| Corporate | Rs.7,750/- |

## SITCON 2026 STALL LAYOUT HALL 1





- PREMIUM STALL (2mx3m) Rs.39,000/-
- REGULAR STALL 15,000/- (2mx2m)
- PRIME STALL (corner) 20,000/- (2mx2m)
- CORPORATE STALL FULL STAGE
- TITLE SPONSOR Title Sponsor applicable only for packages of 8 stalls. Nos. 32 to 39.

**NOTE :** LAYOUT IS SCHEMATIC, FINAL DIMENSIONS MAY VARY ON-SITE

**Special Offer For Our SCC Members Every Stall Booking You Get Half Page Souvenir Advt Free**

## SITCON 2026 STALL LAYOUT HALL 2




| | |
|---|---|
| Regular | 4 Sqm |
| Prime | 4 Sqm |
| Premium | 6 Sqm |
| Corporate | 6 Sqm. |

- Colour Indicates subject to change in measurements & tariff (2m x 3m) Rs.22,500/-
- Colour Indicates subject to change in measurements & tariff (2m x 3m) Rs.30,000/-

**NOTES**
- All Stalls are 6'6" x 6'6"
- Passage with centre barricade ensure smooth visitor flow
- Exit options on Right (Food Court)

SCAN & PAY

**Bank Details for Payment** *All Payment by Cheque / DD / NEFT / RTGS or Demand Draft in favour of*

**SITCON**
State Bank of India,
Branch : SME Branch
A/c No. :38502195088 IFSC :SBIN0000988

| | | |
|---|---|---|
| **K.K. DINESH** President | **T.R. MOHANRAM** Imm. Pt. President | **A.B. KUMARESH BABU** General Secretary |
| **V.V. RAMLAKSHMANJI** Treasurer | **S.G. SRINIVASAN** Jt. Secretary | **T.N. SURIYAPRAKASH** Jt. Secretary |

**K.K.DINAKARAN** Jt. Secretary (Acting)

**K.K.KUBENDRAN**
98940 37794
SITCON CHAIRMAN & VICE PRESIDENT

**FOR STALLS BOOKING CONTACTS**

**Co-ordinators**

| | |
|---|---|
| S.S.RAMSUNDAR | 86108 90919 |
| M.M.DHANASEKARAN | 944 340 0857 |

**Team Associate**

| | |
|---|---|
| T.R.Rameshbabu | 8608029290 |
| J.K. Vijayaragavan | 9994647080 |
| J.R.Suresndrakumar | 7667336215 |
| E.R.K.Chetan babu | 98454 06773 |

**Those who join with our corporate scheme, the logo of the company will be included in our promotion activities...**

Organised by

SOURASHTRA CHAMBER OF COMMERCE • MADURAI •

திட்டமிடுவோம் !
செயல்படுவோம் 1!
சிகரம் தொடுவோம் !!!

அவோ ! மிளோ !! ஹொடோ !!!

SITCON

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

August 7, 8 & 9 & 15, 16, 2026

# SOUVENIR ADVT TARIFF

| | ADVT.SIZE/DETAILS | RATE(Rs.) | TICK |
|---|---|---|---|
| 1 | Back 1st Wrapper Back Outer | Rs. 30,000 | ☐ |
| 2 | Back 1st Wrapper Inner | Rs. 25,000 | ☐ |
| 3 | Front 1st Wrapper Inner | Rs. 25,000 | ☐ |
| 4 | Inner Prime Front | Rs. 15,000 | ☐ |
| 5 | Inner Prime Back | Rs.15,000 | ☐ |
| 6 | Inner Full Page (Size : 9'x7') | Rs. 6,000 | ☐ |
| 7 | Inner Half Page ( Size : 4.25' x7') | Rs. 3,500 | ☐ |
| 8 | Book Size : 11'x8.5' | | |

Contact for Souvenir Advt
E.R.K. ViGNESH
Mobile : 944 224 4648
email : sourashtra.chamber@gmail.com

## SITCON 2026 DONATION

| | | |
|---|---|---|
| Platinum Donor | Rs. 2,00,000/- | ☐ |
| Diamond Donor | Rs. 1,00,000/- | ☐ |
| Golden Donor | Rs. 50,000/- | ☐ |
| Silver Donor | Rs. 25,000/- | ☐ |

**Bank Details for Payment**

*All Payment by Cheque / DD / NEFT / RTGS or Demand Draft in favour of*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
State Bank of India,
Branch : Madurai City Branch
A/c No. : **30134805614** IFSC : **SBIN0011544**

SCAN & PAY

## Advt. Tariff in SITCON Campus

| | | |
|---|---|---|
| Front Arch | Rs. 50,000/- | ☐ |
| Innner Arch | Rs. 40,000/- | ☐ |
| Indor Arch | Rs. 30,000/- | ☐ |
| LED Advt in Backdrop | Rs. 25,000/- | ☐ |
| Media Advt 1Minute Video | Rs. 20,000/- | ☐ |
| Flex Banner in Campus | Rs. 5,000/- | ☐ |
| Flex Banner in Hall | Rs. 5,000/- | ☐ |

SITCON 2026 CHAIRMAN
**K.K. KUBENDRAN**
CELL : 98940 37794

**SITCON PROGRAMS**
All Office Bearers,
All Past Presidents,
All Advisors & All Patrons

SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI
திட்டமிடுவோம் !
செயல்படுவோம் !!
சிகரம் தொடுவோம் !!!

அவோ ! மிளோ !! ஹொடோ !!!
**SITCON**
SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE
August 7, 8 & 9 & 15, 16, 2026

## STALL 2026 TEAM

| | | |
|---|---|---|
| S.S. RAMSUNDAR | Co-ordinator | 93441 22191 |
| M.M. DHANASEKARAN | Co-ordinator | 94434 00857 |
| T.R. Ramesh Babu | Associate | 86080 29290 |
| J.K. VIJAYARAGAVAN | Associate | 99946 47080 |
| J.V. Surendrakumar | Associate | 76673 36215 |
| E.R.K. Chetan Babu | Associate | 98454 06773 |

## SOUVENIR 2026 TEAM

| | | |
|---|---|---|
| E.R.K.VIGNESHBABU | Co-ordinator | 94422 44648 |
| L.R. Baskar | Associate | 80883 38268 |
| K.K. Shankar | Associate | 97881 62559 |
| K.S.Sivakumar | Associate | 93441 51331 |
| K.K. Ramkumar | Associate | 98421 40007 |

## FINANCE TEAM

| | | |
|---|---|---|
| K.K.DINAKARAN | Co-ordinator | 98409 60833 |
| S.R. SUNDARNATH | Co-ordinator | 92444 03917 |
| K.R.Sridhar | Associate | 99949 01004 |
| T.T.Sethuraman | Associate | 93600 91122 |
| K.D. Dinakaran Babu | Associate | 98429 43372 |
| K.S.Sivakumar | Associate | 93441 51331 |
| N.R.R.Gopi | Associate | 98431 70264 |
| B.Anand | Associate | 99654 59333 |
| B.V. Ramesh | Associate | 94431 53384 |
| N.P. Saravanakumar | Associate | 93452 09338 |

## MADURAI RUN (Public Relation)

| | | |
|---|---|---|
| S.S. PREMKUMAR | Co-ordinator | 95905 48127 |
| T.M. RUBESHBABU | Co-ordinator | 95000 35200 |
| T.R. Saravanan | Associate | 92446 84702 |
| Amrutesh Jaghuva | Associate | 99447 75111 |
| V.S. Vishnuvarthan | Associate and All NEXTGEN Team | |

## ADMINISTRATION TEAM

| | | |
|---|---|---|
| T.K.SIVANATH BABU | Co-ordinator | 94423 27081 |
| L.B. Ashok Kumar | Associate | 99421 60024 |
| L.R. Baskar | Associate | 8088338268 |
| A.T. Baskar | Associate | 94429 37409 |

## LUCKY DRAW TEAM

| | | |
|---|---|---|
| S.M.KARTHIKUMARAN | Co-ordinator | 9443831496 |
| T.G.Surajlal | Associate | 98436 20908 |
| N.A.S.Muthukumaraswamy | Associate | 99948 71346 |
| N.R. Sivakumar | Associate | 98651 65388 |
| K.J. Jayakumar | Associate | 98659 92444 |
| P.S.Janarthanan | Associate | 81226 00950 |
| T.H. Ravikumar | Associate | 91766 56585 |

## LIAISON TEAM (PRO)

| | | |
|---|---|---|
| N.S.PREMKUMAR | Co-ordinator | 99944 35350 |
| M.K. Yoganathan | Associate | 98428 60106 |
| M.G. Vijayakumar | Associate | 98655 88641 |
| J.R. Premkumar | Associate | 98657 60051 |
| G.R. Sridharan | Associate | 90800 36407 |
| T.K. Sivakumar | Associate | 93441 02180 |

## FOOD TEAM

| | | |
|---|---|---|
| K.R.B.SIVAPRAKASH | Co-ordinator | 94433 66251 |
| E.S. Ramesh | Associate | 92442 31583 |
| A.S.V. Ganesh | Associate | 93452 13551 |
| M.R. Muralidharan | Associate | 94885 53218 |
| N.P. Saravanakumar | Associate | 93452 09338 |
| K.S. venkatasubramanian | Associate | 94865 05410 |
| T.G. Satheeshkumar | Associate | 98421 36689 |

## HALL & STAGE with MOMENTO TEAM

| | | |
|---|---|---|
| S.K.B.CHANDRAPRAKASH | Co-ordinator | 98655 45048 |
| T.K. YAGESHWARAN | Co-ordinator | 99524 22260 |
| B.V. Kuppuraj | Associate | 98431 73403 |
| T.G.Satheesh Kumar | Associate | 98421 36689 |
| N.P. Saravanakumar | Associate | 93452 09338 |
| T.G.Surajlal | Associate | 9843620908 |
| K.K. Shankar | Associate | 97881 62559 |
| R.R.R. Sivakumar | Associate | 98944 06600 |

## SECURITY & SAFETY TEAM

| | | |
|---|---|---|
| Dr. A.R. GANESHAN | Co-ordinator | 98421 75804 |
| G.R.Subramanian | Associate | 94427 52044 |
| Mari Vasanthakumar | Associate | 98423 36106 |
| B.S.Rajan | Associate | 98421 82633 |
| A.B.Suresh | Associate | 98436 34202 |
| N.R. Sivakumar | Associate | 98651 65388 |
| K.S. Ananthamoorthi | Associate | 89258 43546 |
| M.U.Saravanan | Associate | 93441 51931 |
| LNR Damodharan | Associate | 98431 71477 |
| J. Suresh | Associate | 94434 73057 |
| S.M.Sureshkannan | Associate | 98431 79944 |

## REGISTRATION / ENROLLMENT TEAM

REGISTRATION / ENROLLMENT TEAM

| | | |
|---|---|---|
| S.S. PREMKUMAR | Co-ordinator | 95905 48127 |
| J.S.SAYEEJEEVAN | Co-ordinator | 95004 40811 |
| M.K. Yoganathan | Associate | 98428 60106 |
| M.G. Vijayakumar | Associate | 98655 88641 |
| M.U.Saravanan | Associates | 93441 51931 |
| L.B. Ashok Kumar | Associate | 99421 60024 |
| P.R. Kubendran | Associate | 9843065851 |
| T.G.Satheesh Kumar | Associate | 98421 36689 |

## CROWD PULLING TEAM

| | | |
|---|---|---|
| K.V. KUMARESHAN | Co-ordinator | 98940 51735 |
| B.S.JANARTHANAN | Co-ordinator | 97905 75650 |
| V.V. Suresh | Associate | 98421 88421 |
| P.S. Kumar | Associate | 93448 89113 |
| T.M. Hemanath | Associate | 99525 70562 |
| A.T. Baskar | Associate | 94429 37409 |
| LNR Damodharan | Associate | 9843171477 |
| J.Suresh (Ideal) | Associate | 94434 44569 |
| T.K.Amarnath | Associate | 94430 79269 |
| K.L. Saravanan (Adv) | Associate | 82203 90647 |
| Aram Udaya | Associate | 63824 47843 |

## VIP & GUEST TEAM

| | | |
|---|---|---|
| V.G.RAMDOSS | Co-ordinator | 93441 00360 |
| M.M.Gopison | Associate | 99622 95451 |
| O.B.Dileeban Chakkaravarthi | Associate | 99407 76944 |
| Allun Thulasi | Associate | 95003 38866 |
| Dr. T.M.Prasannakumar | Associate | 98421 94643 |

## KIT & COMPLIMENTS TEAM

| | | |
|---|---|---|
| Dr. A.R. GANESHAN | Co-ordinator | 98421 75804 |
| T.K. Saravanakumar | Associate | 94435 72753 |
| K.D. Dinakaran babu | Associate | 98429 43372 |
| K.R.Rajendran | Associate | 93441 00252 |
| N.N.Hariram | Associate | 99948 96453 |
| K.S.Venkatasubramanian | Associate | 94865 05410 |
| A.B.Suresh | Associate | 98436 34202 |

## SITCON RECEPTION WOMENS TEAM

Mrs. Pradeepa kumaresh babu
Mrs. Durga Mohanram
Mrs. Chandrakala Kumareshan
Mrs. Karthikalakshmi Kumaran

Mrs. Pratha Devi Bala
Mrs. Jeyanthi Sekar
Mrs. Malathi Ramesh
Mrs. Sitalakshmi Kaladharbabu
Mrs. Padmavathi Kubendran
Mrs. Pradeepa Kumaresh
Mrs. Parvatha Ramlakshman
Mrs. Subasri Saravanan
Mrs. Vasuki Ramdoss
Mrs. Manjusri Sayeejeevan
Mrs. Jothilakshmi Srinivasan
Mrs. Parameshwari Suryaprakash
Mrs. Subashini-Dinakaran
Mrs. Jeyanthi Ganeshan
Mrs. Vasanthi Janarthanan

Mrs. Jamuna Subramanian
Mrs. Vijayalakshmi Sivanath Babu
Mrs. Vanishree Karthi Kumaran
Mrs. Banumathi Chandraprakash
Mrs. Vasanthi Premkumar
Mrs. Subhalakshmi Dinakaran
Mrs. Thara Ramsundar
Mrs. Preethi Vignesh
Mrs. Vishnupriya Rubeshbabu
Mrs. Rema Premkumar
Mrs. Yamuna Sundarnath
Mrs. Rubhini Subramanian
Mrs. Nithya Aditya

# இதுவரை நடந்த சிட்கான் மாநாடுகளின் ஒரு பார்வை



சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நடத்தும்

**சிட்கான் மாநாடுகளுக்கு பெருமை சேர்த்தவர்**

சீனியர் பிரஸிடென்ட் **பாலா V. குட்டி**

சிட்கான் மாநாட்டு நிகழ்ச்சிகளில் விருது வழங்கும் விழா மிகச் சிறப்பாக நடத்தி மாநாட்டுக்கு பெருமை சேர்த்து கொண்டிருப்பவர்



## 2011 முதல் சிட்கான் மாநாடு

தலைவர் : **C.K.சேகர்,** சேர்மன் : **E.R.குமரேசன்**

நாள் : 23 & 24-04-2011, இடம் : ராஜா முத்தையாமன்றம்,

துறைசார் வல்லுனர்கள்

திரு. **ஐசக் பதம்சிங்,** நிறுவனத் தலைவர், ஆச்சி மசாலா

திரு. **தனுஷ்கரன்** நிறுவனத் தலைவர், கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ்



## 2013 இரண்டாவது சிட்கான் மாநாடு

தலைவர் : **E.R.குமரேசன்,** சேர்மன் : **K.K.G.பிரபாகரன்**

நாள் : 09 & 10-08-2013, இடம் : மடீட்சியா & ராஜா முத்தையாமன்றம்,

துறைசார் வல்லுனர்கள்

திரு. **நடராஜன்** நிறுவனர், அஞ்சலி நல்லெண்ணை

திரு. **கோபிநாத்** விஜய் டிவி புகழ் நீயா? நானா?

ஆடிட்டர் **குருமூர்த்தி** முற்போக்கு சிந்தனையாளர்



## 2015 மூன்றாவது சிட்கான் மாநாடு

தலைவர் : **K.K.G.பிரபாகரன்,** சேர்மன் : **S.K.R.ரமேஷ்**

நாள் : 29 & 30-08 & 1-9-2015, இடம் : லெட்சுமி சுந்தரம் ஹால்

துறைசார் வல்லுனர்கள்

திரு. **வசந்த்குமார்** வசந்த் & கோ, வசந்த் டிவி நிறுவனர்,



## 2017 நான்காவது சிட்கான் மாநாடு

தலைவர் : **S.K.R.ரமேஷ்,** சேர்மன் : **M.K.கலாதர்பாபு**

நாள் : 11,12 & 13-8-2017,

இடம் : செல்லம் சரஸ்வதி ஹால் & தமிழ்நாடு சேம்பர் ஹால்

துறைசார் வல்லுனர்கள்

திரு. Dr. **நல்லி குப்புசாமி செட்டியார்** தொழில் அதிபர்

திரு. **சரத்பாபு** நட்சத்திர உணவு உற்பத்தி திறனாளர்



## 2019 ஐந்தாவது சிட்கான் மாநாடு

தலைவர் : **M.K.கலாதர்பாபு** சேர்மன் : **குமரன் B.ஜகுவா**

நாள் : 2,3 & 4-8-2019, இடம் : ராஜாமுத்தையா மன்றம்

மராத்தான் (மதுரை ரன்) மெல்லோட்ட நிகழ்ச்சி

ஸ்ரீமதி **விபாவரி தவே** குழந்தைகள் நல அமைச்சர், குஜராத்

ஸ்ரீ **முத்துராமலிங்கம்** வேலம்மாள் குழும சேர்மன்

ஸ்ரீ **அசோக்பாபு** மாவட்ட பாஸ்போர்ட் அதிகாரி

ஸ்ரீமதி **கமலேஷ் ஜோஷிபுரா** குஜராத்



## 2022 ஆறாவது சிட்கான் மாநாடு

தலைவர் : **குமரன் B.ஜகுவா** சேர்மன் : **T.R.மோஹன்ராம்**

நாள் : 5, 6 & 7-8-2022, இடம் : செல்லம் சரஸ்வதி ஹால் & நியூ செஞ்சுரி ஹால்

மராத்தான் (மதுரை ரன்) மெல்லோட்ட நிகழ்ச்சி

திருமதி **ஆதிலெட்சுமி குருமூர்த்தி** மகளிர் திறன் மேம்பாடு

திரு. **லேனா தமிழ்வாணன்** வணிக மேம்பாடு

திரு. **சு.வெங்கடேசன்** மதுரை பாராளுமன்ற உறுப்பினர்

திரு. **ராஜாகோவிந்தசாமி** தனிமனித மேம்பாடு



## 2024 ஏழாவது சிட்கான் மாநாடு

தலைவர் : **T.R.மோஹன்ராம்** சேர்மன் : **K.K.தினேஷ்**

நாள் : 9. 10 & 11, 14 & 15-8-2024, இடம் : மடீட்சியா ஹால் & தமிழ்நாடு சேம்பர் ஹால்

மராத்தான் (மதுரை ரன்) மெல்லோட்ட நிகழ்ச்சி

வெளிநாடு வாழ் இந்தியர்களுடனான காணொளிக் கலந்துரையாடல்

ஸ்ரீ **குமார் வேம்பு** Founder & CEO, Gofrugal Technologies.

ஸ்ரீ **அம்ருதேஷ் K.ஜகுவா** Quality Knitwears P Ltd.,

ஈரோடு **மகேஷ்,** விஜய் டிவி புகழ், நடிகர், காமெடியன்

ஸ்ரீ **அருண் பிரகாஷ்** CEO, Guvigeek Network

**Dr. T.S.ராகவன்** Ex. Chairman Indian Bank

## மாநாடுகளின் நோக்கங்கள் / மாநாடுகளில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள்

### கருத்தரங்குகள்
பல்வேறு தொழில்நுட்ப மற்றும் வணிக கருத்தரங்குகள்

### பயிற்சி பட்டறைகள்
தொழில் முனைவோர், தொழில் நுட்ப நிபுணர்கள் பயிற்சி

### கண்காட்சிகள்
புதிய பொருட்கள் மற்றும் சேவைகள் கண்காட்சி

### வலையமைப்பு
தொழில்நுட்ப வல்லுனர்கள் மற்றும் தொழிலாளர்கள் இணையும் வாய்ப்பு

### விருதுகள் & அங்கீகாரம்
சிறந்த நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது

## சிட்கான் மாநாடுகளின் சிறப்பம்சங்கள்

**15000 +**
பொதுமக்களின் வருகை

**நிபுணர்கள்**
துறைசார் வல்லுநர்களின் பங்கேற்பு

**100 +**
கருத்தரங்குகள், பயிலரங்குகள்

**புதிய வாய்ப்புகள்**
தொழில் & தொழில்நுட்ப வளர்ச்சி

**500 +**
நிறுவனங்கள் பங்கேற்பு

**சமூகப் பொறுப்பு**
மாணவர் நலத் திட்டங்கள் & சமூக சேவை

"அறிவை பகிர்ந்து வளர்வோம், அனைவரும் இணைந்து முன்னேறுவோம்"

# சொந்தமா தொழில் தொடங்க ஆசையா?

## இ- சேவை மையம் வைக்கலாமா?

நீங்களே சொந்தமாக இ-சேவை மையம் தொடங்கி கை நிறைய சம்பாதிக்கலாம். அது எப்படி என்று இங்கே பார்ப்போம்.

சொந்தமாக இ-சேவை மையம் தொடங்குவது என்பது இன்றைய டிஜிட்டல் காலகட்டத்தில் மிகச் சிறந்த தொழில் வாய்ப்பாகும். அரசுப் பணிகளை நேரடியாக மக்களிடம் கொண்டு சேர்க்கும் இந்தச் சேவையைத் தொடங்க நீங்கள் சில வழிமுறைகளைப் பின்பற்றினால் போதும். எளிதாக தொடங்கிவிடலாம்.

குறைந்தபட்சம் 10ஆம் வகுப்பு அல்லது 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கணினி அறிவு இருப்பது அவசியம். விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தியடைந்தவராக இருக்க வேண்டும். ஆதார் அட்டை, கல்விச் சான்றிதழ், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் வங்கி கணக்கு புத்தகம் ஆகிய ஆவணங்கள் தேவைப்படும்.

இ-சேவை மையம் தொடங்க இரண்டு வழிகள் உள்ளன. தமிழ்நாடு அரசு இ-சேவை மையம் (TNeGA) என்பது தமிழக அரசு நேரடியாக வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட மையம். இதற்கு TNeGA என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அவ்வப்போது அறிவிக்கப்படும் விண்ணப்பங்களை நிரப்ப வேண்டும். குறிப்பிட்ட பகுதிகளில் காலியாக உள்ள இடங்களுக்குத் தகுதியானவர்களைத் தேர்வு செய்து அரசு உரிமம் வழங்கும்.

அடுத்த வழிமுறைதான் பொது சேவை மையம் (CSC). இது மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மையம் ஆகும். இது எளிதாகத் தொடங்கக்கூடியது. இதற்கு register.csc.gov.in என்ற தளத்திற்குச் சென்று உங்கள் ஆதார் எண்ணைப் பயன்படுத்திப் பதிவு செய்ய வேண்டும்.

உங்கள் பகுதியில் ஏற்கனவே CSC மையம் இல்லையென்றால் நீங்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த பிறகு களப் பணியாளர்கள் உங்கள் கடையைச் சரிபார்த்து உரிமம் வழங்குவார்கள். இ-சேவை மையம் தொடங்க கணினி, இன்டர்நெட் வசதி, பிரிண்டர் மற்றும் பயோமெட்ரிக் சாதனம் தேவை.

இ-சேவை மையம் தொடங்க குறைந்தபட்சம் 100 சதுர அடி கொண்ட, மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடம் தேவை. இந்த மையத்தின் மூலம் நீங்கள் மக்கள் நல சேவைகளை வழங்கி வருமானம் பெறலாம். வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் விண்ணப்பிக்க உதவலாம். அதேபோல, கார்டு விண்ணப்பித்தல், பாஸ்போர்ட் விண்ணப்பம், EB பில் செலுத்துதல், சொத்து வரி செலுத்துதல், ஆதார் திருத்தம், பணம் எடுத்தல் (AEPS), மணி டிரான்ஸ்பர், ஆன்லைன் தேர்வு விண்ணப்பங்கள், கல்லூரி சேர்க்கை விண்ணப்பங்கள் மூலம் வருமானம் ஈட்டலாம்.

ஆரம்பகட்டமாக உபகரணங்கள் மற்றும் இடத்திற்கு ஏற்ப 50,000 ரூபாய் முதல் ரூ. 1.5 லட்சம் வரை முதலீடு தேவைப்படலாம். பொதுச் சேவை மையத்துக்கான ஆன்லைன் பயிற்சி வகுப்புகளை அரசு வழங்குகிறது. அதை முறையாகக் கவனித்துச் சான்றிதழ் பெற வேண்டும். இ-சேவை மையத்திற்கு வரும் மக்களிடம் அரசு நிர்ணயித்த கட்டணத்தை மட்டுமே வசூலிக்க வேண்டும். அதிகக் கட்டணம் வசூலிப்பது புகாருக்கு வழிவகுக்கும் என்பதை நினைவில் கொள்ளவும்.

இன்றைய காலகட்டத்தில் ஆதார் கார்டு, பான் கார்டு போன்றவற்றுக்கான தேவை அதிகமாக இருப்பதால் கிராமங்களில் மக்கள் இவற்றுக்கான சேவையைப் பெற ஆன்லைன் சேவைகளை அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். எனவே இ-சேவை மையம் வைப்பது நல்ல வருமானம் தரும் தொழிலாக இருக்கும். இந்த தொழிலில் வாடிக்கையாளர்களைக் கையாள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இது மக்கள் சார்ந்த சேவை என்பதால் பணம் சம்பாதிப்பதில் மட்டும் கவனம் செலுத்தாமல் மக்கள் சேவையையும் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

## சிறப்பு சந்திப்பு



மதுரைக்கு வருகை தந்திருந்த மத்திய தொழிலாளர்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவ்யா அவர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் நேரில் சந்தித்தனர். மத்திய அரசு, தமிழக தென்மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கும், உள்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை மனு ஸௌ. சேம்பர் சார்பாக அளிக்கப்பட்டது.



# தேர்தல் முடிவுகள் - 
## தேர்ந்த முதிர்ச்சியின் பிரதிபலிப்பு

2026 தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் முன் எப்போதும் இல்லாத வகையில் வித்தியாசமாகவும் விசித்திரமாகவும் அமைந்திருக்கிறது.

வாக்குப்பதிவு புதிய உச்சத்தை அடைந்து 85 சதவிகிதம் வரை உயர்ந்திருப்பது, வரலாறு காணாதது. வெளியூர்களிலிருந்தும், ஏன், வெளிநாடுகளிலிருந்தும் வருகை புரிந்து வாக்களித்தவர்கள் போற்றுதலுக்குரியவர்கள். குறிப்பாக, இளைஞர்களும், முதல்தடவை ஓட்டளிப்பவர்களும் காட்டிய உற்சாகம், பிரமிக்கத்தக்கது. ஜனநாயகக் கடமையை சிரமேற்கொண்டு நிறைவேற்றிய அத்தகையோர்களின் பங்களிப்பு, நிகரற்றது. ஈடுயிணையில்லாதது.

SIR மூலமாக வாக்காளர் பட்டியல் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு, இறந்தவர்கள், விலாசம் மாறியவர்கள், இரட்டைப் பதிவுகள், இத்யாதி நீக்கிய பிறகு கள்ள ஓட்டு போடுவது, வாக்குச்சாவடியை கைப்பற்றுவது போன்ற வன்முறைகள் முற்றிலுமாக தவிர்க்கப்பட்டிருக்கின்றன. தேர்தல் கமிஷனின் இத்தகைய சீர்திருத்த நடவடிக்கைகள் பாராட்டுக்குரியன.

வாக்குச்சாவடியில் தமது பெயர், பட்டியலில் இடம் பெறவில்லை என்று பொதுவாக, தேர்தலுக்கு தேர்தல் கூறப்படும் குற்றச்சாட்டு, இம்முறை பெரிதாக எழவில்லை.

பிரச்சாரத்திலும் பல புதுமைகள் புகுத்தப்பட்டன. ஒவ்வொரு தொகுதிக்கும் முக்கியத்துவம் கொடுத்து, பாரதம் முழுவதிலிருந்து பலதலைவர்களை வரவழைத்து பரப்புரை செய்து தோற்ற கட்சிகளும் உள்ளன. வேட்பாளர், தொகுதிப் பக்கம் வராமலேயே வெற்றி அடைந்த கட்சியும் உண்டு.

வியூகம் அமைத்து நிபுணர்களின் துணைகொண்டு பிரச்சாரம் செய்வது வழக்கம். இந்த தேர்தலிலும் அது வாக்காளர்களை சிறப்பாக சென்றடைந்தது.

தேர்தலுக்கு முந்தைய கணிப்பு, வாக்களிப்புக்குப் பிந்தைய கணிப்பு, அத்தனையும் தவிடுபொடியாக்கிட்டது, மக்களின் ரகசிய எண்ண ஓட்டம்.

“கணிப்பு”களின் தொகுப்பு, “கவனிப்பு”களால் என்றானபிறகு அவற்றின் நம்பகத்தன்மை கேள்விக்குறி ஆகிவிட்டதே!. ஜோதிடர்களின் கணக்கிலும் பலவகை பிணக்குகள், ஹேஸ்யங்களும் பொய்த்துப் போயின.

ஓட்டுக்கு பணம் வாங்கிக்கொண்டு, வாக்காளர்கள் தவறாமல் அவர்களுக்கே வாக்களித்த வாடிக்கை, இம்முறை வேடிக்கை காட்டியது, கொடுத்தவர்களுக்கு வேதனை, இதுவும் ஒருவகையில் மக்களாட்சியின் சாதனை!!

ஆண்டாண்டு காலம் ஆண்ட அஇஅதிமுக கட்சி, வைப்புத்தொகையை பல தொகுதிகளில் பறிகொடுத்தது பரிதாபம் என்றால், ஆண்டுகொண்டிருந்த முதலமைச்சரே வெற்றி வாய்ப்பை இழப்பது அந்த கட்சிக்கு இழுக்கு.

தமிழ் வருடங்கள் மொத்தம் அறுபது. தமிழ்நாட்டில் 1967ல் தொடங்கி நடக்கும் 2026 வரை, அறுபது ஆண்டுகள் திராவிட கட்சிகளே ஆட்சி செய்து வந்த நிலையில், மாற்றத்தை நோக்கிய, திராவிடத்தை தனது பெயரில் இடம் அளிக்காத, கட்சி தொடங்கி இரண்டு வருடங்களே ஆன, வேறு எந்த கட்சிகளுடனும் கூட்டணி வைக்காத தமிழக வெற்றி கழகம், ஆட்சியை பிடித்திருப்பது அதிசயம்.

சினிமா மோகம் என்று கூறி இந்த வெற்றியை குறைத்து மதிப்பிட முடியாது. ஏனென்றால், இதற்கு முன்பு பல முன்னணி நட்சத்திரங்களின் அரசியல் பிரவேசம் எதிர்பார்த்த வெற்றி அடையாமலும், நீர்க்குமிழிபோல காணாமல் போனதும், சரித்திரம்.

நம் மாநிலத்தின் தனித்துவம் இம்முறையும் தக்கவத்துக் கொள்ளப்பட்டுள்ளது, சிறப்பு. ஒட்டுமொத்த தமிழகமும், ஒரே நிலைபாட்டை எடுத்து, ஒரு கட்சிக்கு ஆளுகின்ற வாய்ப்பை ஏற்படுத்தித்தந்திருப்பது அரசியல் முதிர்ச்சியின் உச்சம் எனலாம். வாக்களித்த மக்களின் முதிர்ச்சி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எம்.எல்.ஏ.க்களிடமும் எதிர்பார்ப்பது தமிழ் இனத்தின் தார்மீக உரிமை.

கூட்டணிக்கட்சிகளுக்குள் நம்பகத்தன்மையை, கட்சித் தலைமை உறுதிசெய்வது அவர்களுக்கு எவ்வளவு முக்கியமோ அதே அளவில் எள்ளளவும் குறையாது ஆளும் கட்சியிடம் மக்கள் நம்பகத்தன்மையை எதிர்பார்க்கிறார்கள். அந்த நம்பிக்கையை காப்பாற்றுவது, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது, அரசாங்கத்தின் கடமை. புதிதாக பதவி ஏற்றுள்ள முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் அவர்கள் மக்கள் பணி என்ற இறைக்கு ஒப்பான பொறுப்பை நிறைவேற்ற வாழ்த்துகள்.

*– வீரஜா*

## ஸ்டார்ட்அப் முதலீடுகள் 4வது இடத்தில் இந்தியா

கடந்த 2025-26 நிதியாண்டில், ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கான முதலீட்டு வரவில் இந்தியா உலகளவில் 4வது இடத்தை தக்கவைத்துள்ளது. உலக அளவில் அதிக முதலீட்டை ஈர்த்த நாடுகளில் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா 4வது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளை விட இந்தியா ஸ்டார்ட் அப் முதலீட்டில் முன்னிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

முந்தை நிதியாண்டை விட 2025-26ம் நிதியாண்டில் ஒட்டுமொத்த முதலீடு குறைந்தாலும், ஆரம்ப நிலை நிறுவனங்கள் மீதான முதலீட்டாளர்களின் நம்பிக்கை 33% அதிகரித்துள்ளது.

# குடிசைத் தொழில் – சந்தை வாய்ப்புகள்

நமது ஸௌராஷ்ட்ர சமூகத்தவர்கள் பலர் குடிசைத் தொழிலில் (Cottage Industry) ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக பிஸ்கட், தின்பண்டங்கள் போன்ற உணவுத் துறையில். தரமான பொருளைத் தயாரிக்கும் நம் மக்கள், மார்கெட்டிங்-ல் கூடுதல் கவனம் செலுத்தினால் அவர்களின் தொழில் மேம்படும். பெரிய விளம்பர பட்ஜெட் இல்லாமலே வாடிக்கையாளர்களை ஈர்க்க பல வழிகள் உள்ளன. அவர்களுக்காகவே சில முக்கியமான சந்தைப்படுத்தல் உத்திகள் இதோ...

### 1. உள்ளூர் சந்தைப்படுத்தல் (Local Marketing)

- இலவச மாதிரிகள் (Free Samples): உங்கள் தயாரிப்பின் தரம் மற்றும் சுவையை மக்கள் அறியச் செய்ய, சிறிய பாக்கெட்டுகளில் சாம்பிள்களை வழங்கலாம்.
- **உள்ளூர் கடைகளுடன் கூட்டணி:** அருகில் உள்ள காபி ஷாப்கள், டீ கடைகள் அல்லது மளிகைக் கடைகளில் உங்கள் தயாரிப்புகளை விற்பனைக்கு வைக்கலாம்.
- **திருவிழாக்கள் மற்றும் கண்காட்சிகள்:** உங்கள் பகுதியில் நடக்கும் திருவிழாக்கள், வாரச்சந்தைகள் அல்லது அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்களில் (Apartments) ஸ்டால்கள் அமைக்கலாம்.

### 2. டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகங்கள்

- **WhatsApp Business:** இது உங்கள் வாடிக்கையாளர் பட்டியலை நிர்வகிக்கவும், புதிய தயாரிப்புகள் பற்றிய கேட்லாக்கை (Catalogue) பகிரவும் சிறந்த கருவி.
- **Instagram & Facebook Reels:** பிஸ்கட் தயாரிக்கும் முறை (Behind the scenes), பேக்கிங் செய்யும் வீடியோக்கள் போன்றவற்றை 'யூளளயிவி' ஆகப் பகிரும்போது அதிக மக்களைச் சென்றடையும்.
- **உள்ளூர் ஹேஷ்டேக்குகளைப் பயன்படுத்துதல்:** உதாரணத்திற்கு #MaduraiCakes அல்லது #ChennaiHomeBakers போன்ற உங்கள் ஊர் பெயருடன் கூடிய ஹேஷ்டேக்குகளைப் பயன்படுத்தினால், உங்கள் பகுதி மக்கள் உங்களை எளிதாகக் கண்டறியலாம்.

### 3. பேக்கேஜிங் மற்றும் பிராண்டிங் (Packaging & Branding)

- **சுத்தமான பேக்கேஜிங்:** உணவைப் பொறுத்தவரை சுகாதாரம் மற்றும் பேக்கிங் முறை மிக முக்கியம். உங்கள் பிராண்ட் பெயர் மற்றும் தொடர்புக்குத் தேவையான விவரங்களை (QR Code போன்றவை) பாக்கெட்டிலேயே அச்சிடலாம்.
- **FSSAI சான்றிதழ்:** உங்கள் தயாரிப்பில் ய்றீறீபுணூ உரிம எண்ணைக் குறிப்பிடுவது வாடிக்கையாளர்களிடையே அதிக நம்பிக்கையை உருவாக்கும்.

### 4. சிறப்பு சலுகைகள்

- **Referral Program:** ஒரு வாடிக்கையாளர் மற்றொருவரை அறிமுகப்படுத்தினால், அவர்களுக்கு அடுத்த முறை வாங்கும் போது சிறிய தள்ளுபடி வழங்கலாம்.
- **Combo Packs:** பண்டிகை காலங்களில் (தீபாவளி, பொங்கல்) பல்வேறு தின்பண்டங்களை உள்ளடக்கிய "Gift Combo" பெட்டிகளை அறிமுகப்படுத்தலாம்.









Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

**JSW Steel**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj** RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*




## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

## VIGNESH GRAPHICS



*All Kinds of Printing Solution*

- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

**Head Office :** 79-A, South Marret Street, Madurai - 625 001.

**Branch :** No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

**Branch :** Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards




உ

விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!

## ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்

## விஜயலெட்சுமி DTP & ஸ்கிரீன்

91506-00904, 99940-18805, 78128-19162

கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.

SINCE-1993 01-07-1993 31 Years 2023 SVLS

வெள்ளி விழா கண்ட நிறுவனம்

அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்

- தினசரி & கட்டிங் மாத காலண்டர்
- 12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர்
- தமிழ் டைரி ஆங்கில டைரி
- 30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்
- 20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை
- பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY
- விபூதி கவர் 7 DAYS DELIVERY
- சாமி படம் வுட்லேமினேசன்
- ஸ்கூல் லேபிள்




நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!

Cell : 98421-18873, 98428-18873

R.R. பாலகுமார்

R.R. குபேந்திரன்

R.R. பிரேம்குமார்

e.mail : svlsmadurai@gmail.com

Date of Posting : 20.05.2026 / BPC MDU
Date of Publication 20th of Every Month
Printed Matter / Book Post

**Kuttuva Silicates (P) Ltd.,**

KSPL,Madurai

5A, (New No.17) New Teppakulam Colony, Near Annai Chandramathi Mahal, Madurai-625 009.
Email: sales@kuttuvasilicates.com, https://www.kuttuvasilicates.com
Phone: Office: +91 452 2312293 / 98409 60846




Manufacturers of
Sodium Silicate Liquid
Sodium Meta Silicate Powder
Geo Polymer Concrete Liquid

**வேல் மருத்துவமனை**
**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**

VSOC: Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy, Joint Replacement

VALE HOSPITAL - RIGHT TREATMENT IS EVERYONE'S RIGHT

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




சிறப்பம்சங்கள்
- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

*Experience the Expertise Advice*

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்
- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

नवीन एवं नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF NEW AND RENEWABLE ENERGY
सत्यमेव जयते

தென் தமிழகத்தின்
**நம்பர் 1**
சோலார் நிறுவனம்

Prakash Green Energy
Providing Perfect Solar Solutions

வீடுகளுக்கு
78000 ரூ
அரசு மானியமாக
பெற்றுத் தரப்படும்

MSME
TANGEDCO

Premium Quality
30+ Years Warranty
100% 100 % Guarantee

**அதிக மின் கட்டணம் செலுத்துகிறீர்களா ?**

உங்கள் வீடு, வணிக கட்டிடம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அதிக
மின் கட்டணம் செலுத்துவதை தவிர்த்திடுவீர்

வங்கி கடன் வசதியும்
உண்டு. வட்டி விகிதம்
6.5% முதல்
+91 63749 01500
support@prakashgreenenergy.com
www.prakashgreenenergy.com
HEAD OFFICE:
14R, N.S Konar Street,
Jaihindpuram,Madurai - 625011



*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com